**STARTING TIME 12.03 P.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 06/2025**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assistant of this court, on 15.04.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **குணசேகரன்** Father's Name :

Address :

Calling : Age :

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** நான் என்ன படித்துள்ளேன் என்றால், எதுவும் படிக்கவில்லை. தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால், தெரியாது. இவ்வழக்கை யார், யார் மீது, எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால், தெரியும். இவ்வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், எனது தகப்பனார் ரத்தினவேல், எனது தம்பியின் முன்னாள் மனைவி வளர்மொழி என்பவர் மீது தாக்கல் செய்துள்ளார்.

2. என்ன பரிகாரம் கேட்டு எனது தகப்பனார் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், எனது தகப்பனார் அவருக்கு சொந்தமான சொத்தைப் பொறுத்து எனது வளர்மொழி பெயரில் உயில் எழுதி வைத்திருந்தார், எனது தகப்பனாருக்கு படிக்க தெரியாததை பயன்படுத்தி கொண்டு அந்த உயிலை

செட்டில்மெண்ட் பத்திரமாக வளர்மொழி எழுதி கொண்டுள்ளார், அதனால், அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யவேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. எனது தகப்பனாருக்கு என்னையும் சேர்த்து 3 மகன்கள், 2 மகள்கள் என்றால், சரிதான். இவ்வழக்கில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் எனது தகப்பனாரின் சுய சம்பாத்ய சொத்துக்கள் என்றால், சரிதான். அதை நிரூபிக்க வேண்டி ஆவணங்கள் எனது தகப்பனார் மூலம் வழக்கில் தாக்கல் செய்து குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

4. 2010ம் ஆண்டு எனது தம்பி பாலகிருஷ்ணன் காணாமல் போய்விட்டார் என்றால், சரிதான். அதன்பிறகு, அவர் எங்கிருந்தார் என்ற விவரங்கள் தெரியாத நிலையில், எனது தகப்பனார் 2020ம் ஆண்டில் காலமாவதற்கு 2 மாதங்களுக்கு முன்பு தான் எனது தம்பி வீடு திரும்பினார் என்றால், சரிதான். இடைப்பட்ட காலத்தில் எனது தம்பி பாலகிருஷ்ணன் வேறொரு திருமணம் செய்து கொண்டிருந்தார் என்றால், சரிதான்.

5. அதேபோல், எனது தம்பி பாலகிருஷ்ணன் அவரது மனைவியாக இருந்த 1ம் பிரதிவாதியை விட்டுச் சென்றுவிட்டதால், 1ம் பிரதிவாதிக்கு எனது தகப்பனார் வேறொரு திருமணம் செய்து வைத்தார் என்றால், சரியல்ல, 1ம் பிரதிவாதிக்கு அவரது பெற்றோர்களே வேறொரு திருமணம் செய்து வைத்தார்கள், அந்த திருமணத்தில் எனது தகப்பனாருக்கு சாராயம் ஊற்றி குடிக்க வைத்து கலந்து கொள்ள செய்துவிட்டார்கள்.

6. எனது தகப்பனார், நல்ல உடல் நலம் மற்றும் மனநலத்துடன் இருந்த சமயத்தில் கடந்த 15.03.2013 அன்று எனக்கும், எனது நரசிம்மன் என்பவருக்கும் தனித்தனியாக செட்டில்மெண்ட் பத்திரங்கள் எழுதி வைத்துள்ளார் என்றால், அந்த தேதியில் எனக்கும், எனது அண்ணன் நரசிம்மனுக்கும், தங்கைகள்

இருவருக்கும் என மொத்தம் 4 செட்டில்மெண்ட் பத்திரங்களை எழுதி வைத்தார், அதே தேதியில் 1ம் பிரதிவாதி வளர்மொழி பெயரில் ஒரு உயில் சாசனத்தையும் எழுதி வைத்தார்.

7. எனக்கு எழுத படிக்க தெரியாத நிலையில், செட்டில்மெண்ட் பத்திரம் எது, உயில் சாசனம் எது என்று எனக்கு எப்படி தெரியும் என்றால், காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 1ம் பிரதிவாதி கொடுத்த புகார் சம்மந்தமாக விசாரித்தபோது போலிசார் படித்து காண்பித்தார்கள். எந்த வருடம், யார்யார் மீது 1ம் பிரதிவாதி காவல்கண்காளிப்பாளரிடம் புகார் கொடுத்தார் என்றால், 1 வருடத்திற்கு முன்பு புகார் கொடுத்தார்கள். யார் யார் மீது அந்த புகாரை கொடுத்திருந்தார் என்றால், என் பெயரிலும் என் அண்ணன் மற்றும் தகப்பனார் பெயரிலும் புகார் கொடுத்திருந்தார். அதுபோல், புகார் கொடுத்ததாக நான் வழக்கிற்காக வேண்டி பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல.

8. 2013ம் ஆண்டு எனது தகப்பனார் 1ம் பிரதிவாதி பெயரில் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்த பிறகு, அந்த சொத்தில் 1ம் பிரதிவாதியும், அவரது பெற்றோரும் பயிர் செய்து வந்தார்கள் என்றும், அந்த சொத்திலிருந்து 2017ம் ஆண்டு நானும், எனது அண்ணன் நரசிம்மன் மற்றும் எனது பிள்ளைகள் சேர்ந்து, 1ம் பிரதிவாதியையும், அவரது பெற்றோரையும் தாவா சொத்துக்களிலிருந்து வெளியேற்றிவிட்டு நாங்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டோம் என்றால், சரியல்ல, பத்திரம் எழுதிய நாளிலிருந்து எனது தகப்பனார் தான் தாவா சொத்துக்களை அனுபவித்து வந்தார், 1ம் பிரதிவாதியோ அவரது பெற்றோர்களோ தாவா சொத்தினை எப்போதும் அனுபவித்து வந்ததில்லை.

9. தாவா சொத்துக்களை நாங்கள் ஆக்கிரமித்து கொண்ட காரணத்தால் தான் 1ம் பிரதிவாதி என் மீதும், எனது அண்ணன் நரசிம்மன் மீதும் காவல் கண்காணிப்பாளர் அலுவலக நில அபகரிப்பு பிரிவில் புகார் கொடுத்தார் என்றும்,

எனது தகப்பனார் மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல, வழக்கிற்காக வேண்டி எனது தகப்பனார் மீதும் புகார் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

10. வா.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணம் 15.03.2013 அன்று எனது தகப்பனாரால், 1ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் என்றால், உயில் எழுதுவதற்கு பதிலாக செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி உள்ளார்கள். எனது பிரமாண வாக்குமூலத்தின் பக்கம் 2–ல், 15.03.2013 தேதியில் எனது தகப்பனார் என் பெயரிலும், எனது அண்ணன் நரசிம்மன் பெயரிலும் செட்டில்மெண்ட் எழுதியதாக தான் சொல்லி உள்ளேனே தவிர எனது தங்கைகள் பெயரிலும், 1ம் பிரதிவாதி பெயரிலும் செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதியதை பற்றி சொல்லவில்லை என்றால், சரியல்ல, எனது தங்கைகள் பெயரிலும் என் பெயரிலும், எனது அண்ணன் பெயரிலும் என மொத்தம் 4 செட்டில்மெண்ட் பத்திரங்களையும், 1ம் பிரதிவாதி பெயரில் ஒரு உயிலும் எழுதி வைத்ததாக தான் சொல்லி உள்ளேன்.

11. என்னிடம் காட்டப்படும் ஆவணம் கடந்த 15.03.2013 அன்று எனது தகப்பனார் எனது அண்ணன் நரசிம்மன் பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்று நகல் என்றால், சரிதான். அந்த ஆவணம் **<u>பி.வா.சா.ஆ 1–ஆக</u>** குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ–1 ஆவணத்தில் எனது தங்கைகள் ராஜம்மாள், தெய்வானை, சாமிநாதன் மற்றும் கடைசி சாட்சியாக நானும் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றால், சரிதான்.

12. என்னிடம் காட்டப்படும் ஆவணம் கடந்த 15.03.2013 அன்று எனது தகப்பனார் எனது பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்று நகல் என்றால், சரிதான். அந்த ஆவணம் **<u>பி.வா.சா.ஆ 2–ஆக</u>** குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ–2 ஆவணத்தில் எனது தங்கைகள் ராஜம்மாள்,

தெய்வானை, எனது அண்ணன் நரசிம்மன் உள்ளிட்டவர்கள் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால், சரிதான்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

**ENDING TIME 12.39 P.M.**

**(Sd/-. G. Yuvaraj)**

**Special Subordinate Judge,**
**Special Sub Court for L.A.O.P. Cases,**
**Arakkonam.**